DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.46/2019**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | நாகநாதன் | Caste: | |
| Father Name: | பூரணதேவர் | Calling: | |
| Village: | வெள்ளாளவயல் | Religion: | |
| Taluk: | ஆர்.எஸ்.மங்கலம் | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.08.2024.

(எதிரி ஆஜர் .)

**முதன்மை விசாரணை**

எனக்கு சொந்த ஊர் கோவிந்தமங்கலம் கிராமம். நான் தற்போது வெள்ளாளவயல் கிராமத்தில் குடியிருக்கிறேன். என்னுடைய மகன் பெயர் சின்னதம்பி. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் முதலாவதாக உள்ளது என் கையெழுத்துதான். சுமார் 3 வருடத்திற்கு முன்பு திருவாடனை காவல் நிலையத்திற்கு எங்கள் ஊர் கோவிலில் நாடகம் நடத்துவது சம்பந்தமாக அனுமதி கேட்பதற்கு சென்றிருந்தபோது போலீசார் என்னிடம் ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கிகொண்டார்கள். இது அந்த கையெழுத்துதான். பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள சாட்சியின் கையொப்பம் **அ.சா.ஆ.3/அ.சா.6.** இது சம்பந்தமாக என்னை திருவாடனை போலீசார் என்னை விசாரிக்கவில்லை. டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

30.06.2019 அன்று பகல் 3.30 மணிக்கு நானும் என் மகனும் கோவிந்தமங்கலம் காலணி பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த திருவாடணை டிஎஸ்பி எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார் என்றும், அதற்கு சாட்சியாக நாங்கள் பார்வை மகஜரில் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் தற்போது எதிரி என் ஊர்க்காரர் என்பதால் எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

கோவிந்தமங்கலம் கிராமத்தில் நான் ஒரு முக்கியஸ்தர் என்று சொன்னால் சரிதான். நான் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்துப்போட்டேன்.

Sd/- S.Uthamaraj
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)